செய்தி வெளியீடு எண் : 637　　　　　　　　　　நாள்: 20.04.2022

**<u>மின்கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் விவசாயிகளுக்கு 70 சதவீத மானியத்தில் அமைக்கும் திட்டம் தொடர்பான செய்தி வெளியீடு</u>**

❖ மாநில அரசின் முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 40 சதவீத நிதி உதவி மற்றும் ஒன்றிய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் பிரதம மந்திரி விவசாயிகள் ஆற்றல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு (PM–KUSUM) திட்டத்தின் கீழ் 30 சதவீத நிதி உதவியுடன் மொத்தம் 70 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு மின் கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் 10 குதிரைத் திறன் வரையிலான பம்பு செட்டுகள் அமைத்து தரப்படுகிறது.

❖ இத்திட்டத்தில் பதிவு செய்வதற்கான 'போர்ட்டல்' வலைதளங்கள் என்று பொய்யான சில மோசடி இணையதளங்கள் மூலம் திட்டத்தில் ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து பணம் மற்றும் தகவல்களை சேகரிப்பது தெரிய வந்துள்ளது.

❖ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE) மூலம் கடந்த காலங்களில் இது குறித்து பொது அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

❖ இந்த திட்டத்திற்கு என எந்தவொரு பதிவுக் கட்டணத்தையும் டெபாசிட் செய்யவோ அல்லது பொய்யான வலைதளங்களில் எந்தவொரு தனிப்பட்ட தகவல்களையும் பகிரவோ வேண்டாம் என்று பொது மக்களுக்கு / விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

❖ இத்திட்டத்தின் மீதான புகார்களை பெற்றவுடன் தவறான நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது மற்றும் பல போலி பதிவு இணையதளங்கள் முடக்கப்பட்டுள்ளது.

❖ மின் கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைத்து தருவதாக போலி இணையதளங்கள் மட்டுமின்றி, வாட்ஸ் அப், பேஸ்புக் மற்றும் பிற சமூக ஊடகங்களிலும் பயனாளிகளை தவறாக வழி நடத்த பயன்படுத்தப்படுகின்றன. PM–KUSUM திட்டத்தில் ஆர்வமுள்ளவர்கள் எந்தவொரு தகவலையும் வழங்குவதற்கு முன் இணையதளத்தின் நம்பகத்தன்மையை சரிபார்க்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

- PM–KUSUM திட்டத்திற்கான பதிவு போர்ட்டல் எனக் கூறும் Whats App/ SMS:மூலம் பெறப்படும் சரிபார்க்கப்படாத அல்லது சந்தேகத்திற்குரிய இணையத்தளத்திற்கான லிங்கினை கிளிக் செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறது.

- புதிய மற்றும் பிதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் (MNRE) இணைய தளம் www.mnre.gov.in மற்றும் மாநில அரசின் இணையதளம் https://pmkusum.tn.gov.in https://mis.aed.tn.gov.in https://www.aed.tn.gov.in மூலம் மட்டுமே பதிவு மற்றும் திட்டம் பற்றிய தகவல்களுக்கு அணுக வேண்டும்.

**திட்டத்தில் பயன் பெறுவதற்கான தகவல்களுக்கு**:

MNRE இணைய தளமான https://mnre.gov.in PM–KUSUM மைய போர்ட்டல் https://pmkusum.mnre.gov.in–ஐப் பார்வையிடவும் அல்லது டோல் டயல் செய்வதற்கான இலவச எண். 1800–180– 3333,

மாநில அரசின் வேளாண்மைப் பொறியியல் துறை இணையதளம்.
https://pmkusum.tn.gov.in
https://mis.aed.tn.gov.in
https://www.aed.tn.gov.in

வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in